**ஏப்ரல் – 07**

# TNPSC துளிகள்

- இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் உலக இந்திச் செயலகத்தின் (World Hindi Secretariat) கட்டிடத்தை மொரிஸியஸ் நாட்டின் போர்ட் லூயிசிஸில் (Port Louis) தொடங்கி வைத்துள்ளார். முழுவதும் இந்திய அரசின் நிதியால் இந்தச் செயலகம் கட்டப்பட்டுள்ளது. இதற்காக இந்தியா 33 கோடி ரூபாயை வழங்கியது. மொரிஸியஸ் அரசு இதற்கான நிலத்தை வழங்கியது.

# தேசியச் செய்திகள்

## C-17- குளோப் மாஸ்டர்

- இந்திய விமானப் படையானது (Indian Air Force- IAF) முதல் முறையாக C-17 குளோப் மாஸ்டர் எனும் அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்ட மிகப்பெரியப் போக்குவரத்து விமானத்தை எத்தகு தவறுகளின் நேர்வின்றியும் (flawlessly) வெற்றிகரமாக தரையிறக்கியுள்ளது.



- இந்திய விமானப் படையானது C-17 குளோப் மாஸ்டர் விமானத்தை சீன எல்லைக்கு மிக அருகாமையில் அருணாச்சலப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த நவீன தரையிறங்கு ஓடுதளத்தில் (strategic Tuting Advanced Landing Ground -ALG) தரையிறக்கியுள்ளது.
- இந்த விமானத்தின் தரையிறக்கமானது பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய எல்லை மாநிலங்களில் (strategically-key border state) இந்திய விமானப்படையின் ஒட்டுமொத்த பாதுகாப்பு செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்கான ஓர் நகர்வாக கருதப்படுகின்றது.

*C-17 குளோப் மாஸ்டர்*

- அமெரிக்காவினால் தயாரிக்கப்பட்டப் போக்குவரத்து விமானமான C-17 குளோப் மாஸ்டர் படைகளை அழைத்துச் செல்லுதல் (transporting troops), மருத்துவ மீட்பு வெளியேற்ற உதவிகள் (medical evacuation), சரக்குகளை உலகம் முழுவதும் கொண்டு செல்லுதல், அவசரகால உதவிகள், பாதுகாப்பு முக்கியத்துவ வான்பயண திட்டங்கள்

(strategic airlift missions) போன்ற பல்வேறு செயல்களுக்கு பொதுவாக பயன்படுத்தப்படுகின்றது.

- C-17 குளோப் மாஸ்டர் அதிகாரப் பூர்வமாக இந்திய விமானப்படையால் 2013 ஆம் ஆண்டு பணிச் சேவையில் சேர்த்து கொள்ளப்பட்டது.
- 13,000 மீட்டர் உயரத்தில் வட இந்தியாவில் அமைந்துள்ள இமாலய வான்படைதளங்கள் முதல் தென் இந்தியாவில் அமைந்துள்ள இந்தியப் பெருங்கடல் வான் தளம் (Indian Ocean bases) வரை பல்வேறுபட்ட நிலப் பரப்புகளிலும் இந்த விமானத்தை செயல்படுத்த முடியும்.

## I - Metros

- புதுதில்லியில் உள்ள மெட்ரோ பவனில் நடைபெற்ற “இந்தியன் மெட்ரோக்கள்: சிறப்பிற்காக கூட்டிணைதல்” (Indian Metros: Collaborating for Excellence) மீதான மாநாட்டின் போது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகமானது ஐ-மெட்ரோஸ் (I-Metros) அமைப்பைத் துவக்கி வைத்துள்ளது.
- ஐ-மெட்ரோஸ் என்பது அனைத்து இந்திய மெட்ரோ இரயில் நிறுவனங்களின் (all Indian Metro Rail companies) சங்கமாகும்.
- தங்களுடைய நிறுவன செயல்பாட்டில் சிறப்புத்துவத்தை வளர்ப்பதற்கு மெட்ரோ இரயில் தொழில்நுட்பம் தொடர்பான யோசனைகள் மற்றும் அனுபவங்களை இந்திய மெட்ரோ இரயில் நிறுவனங்கள் தங்களிடையே பரஸ்பரம் பகிர்ந்து கொள்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சங்கமே ஐ-மெட்ரோஸ் ஆகும்.
- “எவை மெட்ரோக்களை வெற்றிகரமாக மாற்றுகின்றன” (What makes Metros successful) என்ற தலைப்பின் மீதான ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகள் மீது உலக வங்கி, ரயில்வே மற்றும் போக்குவரத்து வியூக மையம் (Railway and Transport Strategy Centre-RTSC) மற்றும் லண்டன் இம்பீரியல் கல்லூரி (Imperial College London) ஆகியவற்றால் வெளியிடப்படும் The Operator's Story எனும் அறிக்கையும் இந்தக் கருத்தரங்கின் போது வெளியிடப்பட்டது.

## இடம்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் பிரான்ஸ் நாட்டிற்கு இடையேயான இடம்பெயர்வு மற்றும் இயக்கக் கூட்டு ஒப்பந்தத்தில் (Migration and Mobility Partnership Agreement) கையெழுத்திட மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- இரு நாடுகளுக்கிடையே மக்களுக்கிடையேயான தொடர்பை மேம்படுத்துவதில் (people-to-people -P2P) முக்கியமான மைல்கல்லாக இந்த ஒப்பந்தம் கருதப்படுகின்றது.
- இந்த ஒப்பந்தம் ஏழு ஆண்டுகளுக்கு செல்லுபடித் தன்மையுடையது (valid). கூட்டுப் பணிக்குழு (Joint Working Group-JWG) மூலம் ஒப்பந்தத்தின் செயல்பாட்டைக் கண்காணிக்கும் இயங்குமுறையும் (Monitoring Mechanism) தானியங்கு புதுப்பிப்பு (Automatic renewal) வசதிக்கான கூறையும் இந்த ஒப்பந்தம் கொண்டுள்ளது.

## இந்தியா-ஹெல்லெனிக் ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் ஹெல்லேனிக் (Hellenic) நாடுகளுக்கு இடையே புதுப்பிக்கக் கூடிய

ஆற்றல் துறையில் ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தம் (Memorandum of Understanding-MoU) ஒன்று கையெழுத்திடப்பட்டுள்ளது.

- ஒத்துழைப்பிற்கான களங்களோடு (areas of cooperation) தொடர்புடைய விஷயங்களை விவாதிப்பதற்கும், மதிப்பிடுவதற்கும், கண்காணிப்பதற்கும் ஓர் கூட்டுப் பணிக் குழு (Joint Working Group -JWG) இந்த ஒப்பந்தத்தின் படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- பரஸ்பர நன்மைச் சமநிலை (mutual benefit equality) அடிப்படையில் புதிய மற்றும் புதுபிக்கத்தக்க ஆற்றல் தொடர்பான விவகாரங்கள் மீது தொழில்நுட்ப ரீதியான இருதரப்பு ஒத்துழைப்பை மேம்படுத்தவும் அவற்றை ஊக்குவிக்கவும் நிறுவன வகையிலான ஒத்துழைப்புக் கூட்டுறவிற்கு (Cooperative institutional relationship) அடிப்படையை ஏற்படுத்துவதுமே இந்த ஒப்பந்தத்தின் நோக்கங்களாகும்.

## மனநிலை பாதிப்பு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மனநோய் மீதான முதல் தேசியக் கருத்தரங்கம்

- மனநிலை பாதிப்பு, குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் மனநோய் மீதான முதல் தேசியக் கருத்தரங்கம் புதுதில்லியில் நடைபெற்றது.
- இரு நாள் நடக்கும் கருத்தரங்கை உளவியல் துறை (Department of psychiatry) மற்றும் எய்ம்ஸ் உடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டு அமைச்சகம் கூட்டிணைந்து நடத்தியது.
- இந்தியக் குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடத்தில் உளவியல் பாதிப்பு மற்றும் மனநோய் ஆகியவற்றைக் குறிப்பிடுவதற்காக, ஆராய்ச்சிக்கான விரிவான தொகுப்புப் பணிக்கான கூறுகள் மற்றும் மருத்துவ செயல்முறைகள் ஆகியவற்றை வழங்குவதை இக்கருத்தரங்கு நோக்கமாகக் கொண்டது.

# சர்வதேசச் செய்திகள்

## எளிதான ஏற்றுமதிக்கான டிஜிட்டல் தொடக்கங்கள்

- மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகமானது (Ministry of Commerce and Industry) ஏற்றுமதியின் எளிமையாக்கலுக்காக (Ease Of Export) ஏற்றுமதி ஆய்வுக் குழுவின் டிஜிட்டல் தொடக்கங்களை துவங்கியுள்ளது.
- வேளாண் மற்றும் உணவுப் பொருட்கள் ஆகியவற்றில் இந்தியாவின் ஏற்றுமதி ஆற்றலை ஊக்குவிப்பதற்காக டிஜிட்டல் இந்தியா தொடக்கத்தின் (Digital India Initiative) கீழ் இந்த டிஜிட்டல் தொடக்கங்களை மத்திய வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.
- டிஜிட்டல் தொடக்கங்களாவன
    - ✓ ஏற்றுமதி எச்சரிக்கை கண்காணிப்பு இணைய வாயில்
    - ✓ ஆய்வக மதிப்பீட்டு இணைய வாயில்
- ஏற்றுமதி எச்சரிக்கை கண்காணிப்பு இணைய வாயிலானது (Export Alert Monitoring portal) இறக்குமதி செய்யும் நாடுகளால் எழுப்பப்படுகின்ற இணக்கமின்மையை (Non-compliances) கண்காணிக்கும்.

- ஆய்வக மதிப்பீட்டு இணைய வாயிலானது (Lab-one assessment portal) மதிப்பீட்டு அமைப்புகள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் ஆய்வகங்கள் போன்ற அனைத்து ஏற்றுமதி-சார் பங்கெடுப்பாளர்களுக்கும் அவர்களை பொதுவான ஒற்றை மேடையின் மீது திரட்டுவதன் மூலம் அவர்களுக்கு ஏற்றுமதி தொடர்பான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை (unified approach) வழங்கும்.

*ஏற்றுமதி ஆய்வுக் குழு*

- மத்திய அரசின் அதிகாரப்பூர்வ ஏற்றுமதி சான்றளிப்பு அமைப்பே (export certification body) ஏற்றுமதி ஆய்வுக் குழுவாகும். வெளிப்படையான முறையில் ஏற்றுமதி பரிமாற்ற நேரம் மற்றும் செலவைக் குறைக்க ஏற்றுமதி ஆய்வுக்குழு 3 இணைய வாயிலை மேம்படுத்தியுள்ளது.
- 1963 ஆம் ஆண்டின் ஏற்றுமதி (தரக்கட்டுப்பாடு மற்றும் ஆய்வு) (Export (Quality Control and Inspection) Act) சட்டத்தினுடையப் பிரிவு 3ன் கீழ் மத்திய அரசு ஏற்றுமதி ஆய்வுக் குழுவைத் தோற்றுவித்தது.
- ஏற்றுமதி ஆய்வுக்குழு மத்திய அரசிற்கான ஓர் ஆலோசனை அமைப்பாகும் (advisory body) .
- சென்னை, டெல்லி, கொச்சி, கொல்கத்தா, மும்பை ஆகிய இடங்களில் மத்திய வர்த்தக அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ள 5 ஏற்றுமதி ஆய்வு நிறுவனங்களின் (Export Inspection Agencies-EIAs) மீது தொழிற்நுட்ப மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டை ஏற்றுமதி ஆய்வுக்குழு மேற்கொள்கின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தம்

- இந்தியா மற்றும் ஈரான் இடையே வருமானம் மீதான வரிகள் தொடர்பாக வரி ஏய்ப்புத் தடுப்பு (Prevention of Fiscal Evasion) மற்றும் இரட்டை வரி விதிப்பு தவிர்ப்பிற்கான (Avoidance of Double Taxation) ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.



- இந்த ஒப்பந்தமானது பரஸ்பரம் இரு நாடுகளுக்கிடையே முதலீட்டுப் போக்கை (flow of

investment) அதிகரிப்பதோடு இரட்டை வரி விதிப்பைத் தடுப்பதற்காக இரு நாடுகளுக்கிடையே தொழில்நுட்பம் மற்றும் வல்லுநர்களின் பரிமாற்றத்தை ஊக்குவிக்கும்.

- வரி ஏய்ப்பினைத் தடுப்பதற்கு தகவல்களின் பரிமாற்றத்திற்காக வருமானத்தின் மீதான இரட்டை வரி விதிப்பைத் தவிர்க்க பிற நாடுகளுடன் அல்லது குறிப்பிட்ட பகுதிகளுடன் இரட்டை வரிவிதிப்புத் தவிர்ப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்ள மத்திய அரசிற்கு 1961 ஆம் ஆண்டினுடைய வருமானவரிச் சட்டத்தின் பிரிவு 90 -ன் (Section 90 of Income Tax Act, 1961) கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

## எரி தரநிலை நிறுவனம் - மூடப்படுதல்

- மத்திய இரயில்வே அமைச்சகத்தின் கீழ் செயல்படுகின்ற மத்திய பொதுத்துறை நிறுவனமான (Central Public Sector Enterprise-CPSE) எரி தரநிலை நிறுவனத்தின் (Burn Standard Company Ltd-BSCL) மூடலுக்கு மத்திய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.
- அரசுத் தரப்பிடமிருந்து தொடர்ந்து நிதி உதவி மற்றும் பிற ஆதரவுகள் இருந்தும் பத்தாண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து மோசமான செயல்முறை மற்றும் நிதியியல் செயல்பாட்டை இந்நிறுவனம் கொண்டிருப்பதனாலும் எதிர்காலத்தில் இதனுடைய மீளுதலுக்கு குறைந்த நிகழ்தகவு சாத்தியமே காணப்படுவதாலும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**SHUTTER SIGNAL**

- Burn Standard to be shut down and put on the block




- Cabinet approves Rs 417 crore to pay severance packages to 508 employees and clear past debts and liabilities
- Outstanding loans of Rs 35 crore from railway ministry to be written off
- Employees to be offered a VRS

- இரயில்வே அமைச்சகத்திற்குத் தேவையான எஃகு உற்பத்தியிலும், ரயில் சரக்குப் பெட்டிகள் (wagons) தயாரிப்பு மற்றும் பழுதுபார்ப்பிலும் இந்நிறுவனம் ஈடுபட்டு செயலாற்றி வந்தது.
- Burn and Company மற்றும் இந்திய தர வேகான் நிறுவனம் (Indian Standard Wagon Company Limited) ஆகிய நிறுவனங்களின் ஒன்றிணைவு மற்றும் தேசியமயமாக்கலுக்குப் பிறகு

மத்திய கனரகத் தொழிற்சாலைத் துறையின் கீழ் 1976 ஆம் ஆண்டு எரி தரநிலை நிறுவனம் உருவாக்கப்பட்டது.

- முந்தைய பொருளாதார விவகாரங்கள் மீதான அமைச்சரவைக் குழு அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து 2010 ஆம் ஆண்டு இந்நிறுவனத்தின் மீதான நிர்வாகக் கட்டுப்பாடானது மத்திய கனரக தொழிற்துறையிடமிருந்து (Department of Heavy Industries) மத்திய இரயில்வே அமைச்சகத்திற்கு மாற்றப்பட்டது.

## மின்-வழி இரசீதுகள்

- சரக்கு மற்றும் சேவை வரிக் குழுவினுடைய (Goods and Service Tax council-GST Council) முந்தைய முடிவுகளின் படி மாநிலங்களுக்கிடையேயான பொருட்களின் வர்த்தக இயக்கத்திற்கு (Inter-State movement of goods) மின்-வழி இரசீது அமைப்பானது (e-way Bill System) நாடு முழுவதும் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

### GST E-WAY BILL VERSUS ERSTWHILE WAY-BILL

| Feature | GST e-way bill | Old way-bill |
|---|---|---|
| Reduction in detention time | Facility with transporters to raise complaints, in case vehicle is detained for more than 30 minutes | No such facility was available |
| Facilitates GSTR-1 filing | Relevant details in Form GSTR-1 gets auto-populated basis the details furnished in the e-way bill generation process | No such facility was available |
| Prevents double-checking | E-way bill verified once not to be checked again by another tax officer during goods movement | No explicit provision existed for prevention of double-checking by tax officers |
| Contents of way-bill | Harmonized system of nomenclature (HSN) to be mentioned on e-way bill, resulting in additional compliance. No clarity for small assesses who are not required to mention HSN on invoices | No requirement to mention HSN |
| Requirement of consignee's acceptance | Recipient's acceptance of the e-way bill required (within 72 hours of generation) | No such requirement existed for old way-bills |
| Registration requirement for transporters | Mandatory | Optional |

- சரக்கு மற்றும் சேவை வரியினுடைய மின்-வழி இரசீது வசதியானது முதல் முறையாக 2018 ஆம் ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு ரூ.50,000 மதிப்பிலான சரக்குகளை கொண்டு செல்லும் வணிகர்கள் மற்றும் வாகன உரிமையாளர்கள் மின் வழி ரசீதுகளை உடன் கொண்டு செல்ல வேண்டும்.
- சில தொழில்நுட்ப பிரச்சனைகளின் காரணமாக, GST குழுவானது மாநிலங்களுக்கிடையிலான (inter-state) மின்-வழி ரசீதை ஏப்ரல் ஒன்றாம் தேதி முதலும், மாநிலத்திற்குள்ளான மின்-வழி ரசீதை 2018 ஆம் ஆண்டின் ஏப்ரல் 15 ஆம் தேதி முதலும் அமலுக்குக் கொண்டுவர முடிவு செய்தது.
- GST இணைய வாயிலில் (GST Portal) உற்பத்தி செய்யப்படும் ஓர் மின்னணு ஆவணமே (electric document) E-Way bill ஆகும். இது மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான ஓர் பொதுவான பகிரப்பட்ட தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பாகும் (Common and Shared information technology infrastructure).

- இது பொருட்களின் வர்த்தக இயக்கத்திற்கான ஓர் சான்றாக செயல்படுகின்றது.
- தேசிய தகவல் மையத்தால் (National Informatics Centre -NIC) மின்-வழி ரசீது அமைப்பு வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஆயுஷ் QOL-2C

- புற்றுநோயாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக AYUSH QOL-2C எனும் குறியிடப்பட்ட மருந்தின் (coded drug) மேம்பாட்டை ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு (Central Council for Research in Ayurvedic Sciences - CCRAS) துவங்கியுள்ளது.
- மார்பகப் புற்றுநோயாளிகளில் இம்மருந்திற்கான மருத்துவ ஆய்வுகளை ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு மேற்கொண்டுள்ளது.
- CCRAS ஆனது மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் (Ministry of AYUSH) கீழ் செயல்படுகின்ற ஓர் தன்னாட்சியுடைய அமைப்பாகும் (Autonomous body).
- இதன் தலைமையகம் புது தில்லியில் அமைந்துள்ளது.
- ஆயுர்வேதம் மற்றும் சோவா – ரிக்பா மருத்துவ முறைகளில் (Sowa-Rigpa system of medicine) அறிவியல் வழியிலான ஆராய்ச்சிகளின் மேம்பாட்டிற்கும், ஒருங்கிணைப்பிற்கும், மருந்துப் பொருட்களின் கூட்டுச் சேர்ப்பிற்கும் (formulation), ஊக்குவிப்புக்கும் ஆயுஷ் துறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தியாவின் உச்ச அமைப்பே ஆயுர்வேத அறிவியல் ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஆகும்.

- - - - - - - - - - - - - - -